

# ஆடிப்பூர நன்னாளில்



ஆடிப்பூரநன்னாளில் அவதரித்து நீயும்
சூடிக்கொடுத்த மாலையை அந்த அரங்கனும்
தேடிவந்தே அணியச்செய்த திருமகளே !
(ஆடிப்பூர)

வில்லிபுத்தூர் தலமதில் ஓர்நாள்,
விஷ்ணுசித்தர் இல்லத் தோட்டமதில்;
அல்லிக் கொடிபோன்று அன்று தோன்றி,
விஷ்ணுவையே மணந்து கொண்டவளே!
(ஆடிப்பூர)

பூமாலை தொடுத்து நீ அணிந்தபின்
திருமாலுக்கு அணிவித்து மகிழ்ந்தவுன்
பாமாலையில் மனமுருகியே அன்று அந்த
திருமாலும் உன்தனை யேற்கச்செய்தவளே!